முற்பகல் 11–05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சரி, சரி. (குறுக்கீடுகள்)*

திரு. துரைமுருகன்: No, No. *எங்களுக்கு ஒரு பாதுகாப்பை சபாநாயகரிடத்தில் கேட்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஜி.கே. மணி, நீங்கள் சைக்கிள்களை எங்கே நிறுத்துகிறீர்களோ, சொல்லுங்கள்; உரிய இடத்தில், உரிய பாதுகாப்புக் கொடுக்கப்படும். (குறுக்கீடுகள்) உரிய இடத்தில் உங்கள் சைக்கிள்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப்படும்.*

திரு. துரைமுருகன்: *சைக்கிள்களைக் கொண்டுவந்து வைத்து விடுவார்களா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதெல்லாம் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடு) ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். திரு. சி. இராசேந்திரன். (குறுக்கீடுகள்)*

திரு. மு.பெ. சாமிநாதன்: *மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)...*

திரு. ஜி.கே. மணி: *சைக்கிள்களில் வரக்கூடாதா? (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஜி.கே. மணி, என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறீர்கள். உரிய நடவடிக்கை நான் எடுக்கிறேன். (குறுக்கீடுகள்)*

(ஆ) உறுப்பினர் கொடுத்துள்ள முன்னறிவிப்பு

திரு. மு.பெ. சாமிநாதன்: மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன். (குறுக்கீடுகள்)